//நினைவூட்டல்//

# தேனி முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். ஆ5- 2688 /2023 நாள். 18 .07.2023

பொருள் : தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை - 25 - புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது 2023-2024 ஆம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் மேற்கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை : 1. சென்னை -25, தமிழ்நாடு அறிவியல் தொழிலுநுட்ப மையம் செயல் இயக்குனர் கடித.எண். 2226/P1/2023, நாள். 22.05.2023, மற்றும் 23.06.2023.

2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள். 01.06.2023.

-ooOoo-

பார்வை (1) மற்றும் (2) இல் காணும் சென்னை, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநரின் செயல்முறைக் கடிதம் மற்றும் இவ்வலுவலக கடிதத்தின்படி, 2023-2024 ஆம் கல்வியாண்டுக்கான புத்தாக்க அறிவியல் மானக் விருதுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான பதிவுகளை இணைய தளத்தில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளது தேதிவரை எவரும் பதிவேற்றம் செய்யப்படவில்லை இது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களில் வகுப்பிற்கு ஒருவர் வீதம் (5) ஐந்து மாணவர்கள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்ப முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களில் வகுப்பிற்கு ஒருவர் வீதம் (3) மூன்று மாணவர்கள் என விண்ணப்பங்கள் 31.08.2023 ஆம் தேதிக்குள் www.inspireawards-dst.gov.in என்ற இணையதளம் வாயிலாக பதிவு செய்திடவும் மற்றும் இணைப்பில் உள்ள குறிப்புகளை தவறாது பின்பற்றிட வேண்டும். தொடர்நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், எந்தவொரு பள்ளியும் விடுபடாமல், அனைத்து நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் உரிய எண்ணிக்கையிலான புதிய பதிவுகளை தவறாது மேற்கொள்வதை உறுதி செய்யவும், பதிவுகள் சார்ந்த முன்னேற்ற அறிக்கையினை வாராந்திர அறிக்கையாக 24.07.20223 முதல் 28.08.2023 வரை ஒவ்வொரு திங்கட்கிழமையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்து முழுமைப்படுத்திடவும், தேனி மாவட்டக் கல்வி அலுவலர்கள் ( தொடக்கக்கல்வி/இடைநிலை/தனியார் பள்ளி) மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

1. கடிதம் நகல்.
2. வாராந்திர அறிக்கை படிவம்

முதன்மைக் கல்விஅலுவலர்,

தேனி.

18.07.2023

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
   (தொடக்கக்கல்வி/இடைநிலை/தனியார் பள்ளிகள்),
   தேனி மாவட்டம்.
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், அனைத்து அரசு/அரசு உதவிபெறும் /சுயநிதி/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள், தேனி மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்க, தேனி மாவட்டம். (அரசு / அரசு உதவி பெறும் /சுயநிதி, நடுநிலைப் பள்ளிகள்) (தொடர் நடவடிக்கைக்காக)

/இரா.ம./

படிவம் - 1

# INSPIRE AWARD MANAK - 2023 - 2024

மாவட்டக் கல்வி அலுவலகம் -

நாள்-

| வ.எண் | பள்ளியின் வகை | | பள்ளிகள் மொத்த எண்ணிக்கை | விண்ணப்பித்துள்ள பள்ளிகள் எண்ணிக்கை | மொத்த விண்ணப்பங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | உயர்நிலைப் பள்ளிகள் | அரசு | | | |
| | | அரசு உதவி பெறுபவை | | | |
| | | சுயநிதி | | | |
| 2 | மேல்நிலைப் பள்ளிகள் | அரசு | | | |
| | | அரசு உதவி பெறுபவை | | | |
| | | சுயநிதி | | | |
| | மொத்தம் | | | | |

மாவட்டக் கல்வி அலுவலர்

படிவம் - 2

# INSPIRE AWARD MANAK - 2023 - 2024

வட்டாரக் கல்வி அலுவலகம் -

நாள்-

| வ.எண் | பள்ளியின் வகை | | பள்ளிகள் மொத்த எண்ணிக்கை | விண்ணப்பித்துள்ள பள்ளிகள் எண்ணிக்கை | மொத்த விண்ணப்பங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | நடுநிலைப் பள்ளிகள் | அரசு | | | |
| | | அரசு உதவி பெறுபவை | | | |
| | | சுயநிதி | | | |
| மொத்தம் | | | | | |

வட்டாரக் கல்வி அலுவலர்

**Tamilnadu Science and Technology Centre**
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24918787
Website: www.tnstc.gov.in
E-mail : tnstc.science@gmail.com

**Thiru. I.K. Lenin Tamilkovan,** M.Sc.,
Executive Director, FAC.,

கடித எண். 2226/P1/2023 நாள்: 23.06.2023

மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்
தேனி மாவட்டம்

அன்புடையீர்,

பொருள்: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை -25 புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது 2023-2024 ஆம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் மேற்கொள்வது-தொடர்பாக.

பார்வை : 1. Letter No.12011/84/2023-IAM Dated 20.04.2023, Coordinator National Innovation Foundation - India
2. இவ்வலுவலக கடித எண் 2226/P1/2023 நாள்: 22.05.2023

-----

2023 - 2024 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான புதிய பதிவுகள் 2023 மே 1ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக பள்ளி மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் பதிவு செய்ததைப் போலவே இந்த ஆண்டும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பதிவு செய்ய வேண்டும். இதற்காக www.inspireawards-dst.gov.in என்ற இணையதளம் 2023 மே 1ம் தேதியிலிருந்து 2023 ஆகஸ்டு 31ம் தேதி வரை செயல்படும். வகுப்பிற்கு ஒருவர் என ஐந்து மாணவர்கள் பதிவிடலாம். ஐந்து மாணவர்களுக்கு மேல் பதிவிடக்கூடாது,

இந்த ஆண்டு அனைத்து பள்ளிகளும் பதிவு செய்ய ஆவன செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்புகள்:

1. பதிவு செய்யும்போது ஆசிரியர்களின் அலைபேசி எண் ஓராண்டு அல்லது ஈராண்டுத்தொடர்புக்கு ஏற்ற வகையில் அமையுமாறு பதிவிட வேண்டுகிறோம். (பள்ளி மாறிச்செல்பவர்கள், ஓய்வு பெறபோகிறவர்கள் அலைபேசியைக் கண்டிப்பாகப் பதிவிட வேண்டாம்). பள்ளியின் தொலைபேசி எண் இருப்பின் அதை அவசியம் பதிவிட வேண்டுகிறோம்.

2. பள்ளி மின்னஞ்சல் மட்டுமே அவசியம் குறிப்பிடவேண்டும். தனிப்பட்ட மின்னஞ்சல்களைப் பதிய வேண்டாம்.

தங்கள் உண்மையுள்ள

செயல் இயக்குநர், (முகூபொ)

Tamilnadu Science and Technology Centre
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24918787
Website: www.tnstc.gov.in
E-mail : tnstc.science@gmail.com

Dr. S. Soundararajaperumal, M.Sc.,Ph.D.,
Executive Director, I/C.,

கடித எண் 2226/ /P1/2023 நாள்: 22-05-2023

முதன்மைக் கல்வி அலுவலகம் 23 MAY 2023 2688 தேனி

மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்
தேனி மாவட்டம்

அன்புடையீர்,

பொருள்: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை–25 புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது 2023–2024 ஆம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் மேற்கொள்வது - தொடர்பாக.

பார்வை : National Innovation foundation – India - Coordinator letter. F. No. 12011 /84/2023-I AM, Dated 20.04.2023

------

2023 – 2024 ஆம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான புதிய பதிவுகள் மே 1ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக பள்ளி மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் பதிவு செய்ததைப் போலவே இந்த ஆண்டும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பதிவு செய்ய வேண்டும். இதற்காக **www.inspireawards-dst.gov.in** என்ற இணையதளம் 2023 **மே 1-ம் தேதியிலிருந்து** 2023 **ஆகஸ்ட் 31ம் தேதி** வரை செயல்படும். வகுப்பிற்கு ஒருவர் என ஐந்து வகுப்புகளுக்கு ஐந்து பேர் எனப்பதிவிடலாம். ஐந்து பேருக்கு மேல் பதிவிடக் கூடாது. (நடுநிலை வகுப்புகள் மூன்று பேர்)

இந்த ஆண்டு அனைத்துப் பள்ளிகளும் பதிவு செய்ய ஆவன செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்புகள்:

1. பதிவு செய்யும்போது அலைபேசி எண் ஓராண்டு அல்லது ஈராண்டுத் தொடர்புக்கு ஏற்ற வகையில் அமையுமாறு பதிவிட வேண்டுகிறோம். பள்ளியின் தொலைபேசி எண் இருப்பின் அதை அவசியம் பதிவிட வேண்டுகிறோம். பள்ளி மாறிச் செல்பவர்கள், ஓய்வு பெறப்போகிறவர்கள் அலைபேசியைக் கண்டிப்பாகப் பதிவிட வேண்டாம்.
2. மின்னஞ்சல் கண்டிப்பாகப் பள்ளி மின்னஞ்சல் மட்டுமே குறிப்பிடவேண்டும். தனிப்பட்ட மின்னஞ்சல்களைப் பதிய வேண்டாம்.

தங்கள் உண்மையுள்ள
சௌந்தரராஜபெருமாள் 22.5.23
செயல் இயக்குநர்(பொ)